[பேரவைத் தலைவர்] [1990 மார்ச் 31

சட்டமன்றப் பேரவையில் இந்திய ஐக்கிய பொதுவுடைமைக் கட்சியின் சார்பாக ஒரு தனி அணியாக இயங்க அனுமதி அளிக்கிறேன்.

5. கவன ஈர்ப்பு.

(அ) பட்டமேற்படிப்பு மாணவர்களுக்கு தமிழ் மொழியில் பாட நூல்கள் இல்லாதது குறித்து.

*திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாட்டிலுள்ள கல்லூரிகளில் பட்டமேற் படிப்பு படிக்கும் மாணவர்களுக்குத் தமிழ் மொழியில் பாட நூல்கள் இல்லாதது குறித்த'' அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர் களே' தமிழ்நாட்டிலுள்ள கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு வகுப்புகளில் எம்.ஏ. வரலாறு ஒன்றில்தான் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு ஒரே ஒரு கல்லூரியில் பயிற்றுவிக்கப் படுகிறது. மற்ற பாடங்கள் தமிழில் பயிற்றுவிக்கப்படுகிற ஒரு முறை இப்போது இல்லை. பல துறைகளிலும் தமிழில் பயிற்றுவிப்பதற்கான நூல்களை வெளியிடுவதில் இடைக்காலத்தில் ஒரு 5, 6 ஆண்டுக்காலம் சுணக்கம் ஏற்பட்டு விட்டது. அந்த நூல்களை இப்போது அப்படியே வெளி யிடலாமா, அல்லது அவற்றை இந்த 5, 6 ஆண்டுகளில் ஏற்பட் டிருக்கிற புதிய தேவைக்கு ஏற்ப மாற்றங்களோடு வெளியிட வேண்டுமா என்பதும், எவ்வளவு விரைவிலே வெளியிட வேண்டும் என்பதும் அரசாங்கத்தினுடைய பரிசீலனையிலேயும் பல்கலைக் கழகங்களுடைய முயற்சியிலேயும் இருக்கிறது. இந்த ஆண்டில் அதற்குத் தேவையான புத்தகங்களை உருவாக்கத் தகுந்த முயற்சியை மேற்கொள்ளலாம் என்று நான் நம்புகிறேன்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, பொருளாதாரத் துறையில் கூட பட்ட மேற்படிப்புக்கு மாணவர்கள் சேர்ந்திருக்கிறார்கள் என்பது நான் அறிந்த அளவிலே தெரிய வருகிறது. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவ்வாறு இல்லை என்று பதில் அளித்திருக் கிறார்கள். பொதுவாக இந்த தமிழ் டெவலப்மெண்ட் டிபார்ட் மெண்டிலே சட்டச் சொற்களையெல்லாம் தமிழிலே ஆக்கியிருக்கிறார்கள். அதேபோல எல்லாத் துறைகளிலும்

1990 மார்ச் 31] [திரு. கோ. பூவராகன்]

ஹிஸ்டரி அல்லது எக்கனாமிக்ஸ் போன்ற துறைகளிலும் கூட பட்ட மேற்படிப்புக்கு போதுமான புத்தகங்களை நம்முடைய இலாகாவிலேயே வெளியிட விடுவதினாலே அரசாங்கத்திற்கு ஒன்றும் அதிக செலவு இருக்காது. இப்போது கல்லூரிகளில் பொதுவாக எம்.ஏ. பட்டம் பெற்றவர்கள், எம்.பில். பட்டம் பெற்றவர்களைத்தான் வேலைக்கு எடுக்கிறார்கள். அதனால் இது குறித்து அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல விரைந்து பல நூல்களை வெளியிடுவதற்கு முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, பல்கலைக் கழக கல்லூரி பட்ட மேற்படிப்பு வகுப்புகள் யாவும் தமிழிலேயே நடத்தப்பட வேண்டும் என்பது அரசாங்கத்தினுடைய அவா. தகுந்த ஏற்பாடு முன்கூட்டியே செய்யப்படாத காரணத்தால் உடனடியாகத் துவங்க முடியாத ஒரு நிலை இருக்கிறது. பொருளாதாரத் துறையில் எம்.ஏ. பயிலுகிற மாணவர்கள் இப்போது தமிழிலே பயிலுவதாக எனக்கு விவரம் இல்லை. இருந்தாலும் வரலாற்றுக்கு அடுத்தபடி முன்னுரிமை தந்து பொருளாதாரப் பாட நூல்களை உடனடியாக வெளியிடப் படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். தொடர்ந்து அம்முயற்சி ஊக்கப்படுத்தப்படும்.

10-15 மணி

திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பொருளாதாரத் துறையிலே இப்போது கல்லூரிகளிலே அல்லது மேல்நிலைப்பள்ளிகளிலே, எம்.ஏ. பட்டதாரிகளுக்குத்தான் பதவி உயர்வு கொடுக்கப்படுகிறது அல்லது வேலை கிடைக்கிறது. அவ்வாறிருக்கின்றபோது, எம்.பில் படிக்கின்றபோதுகூட, அவர்கள் சொன்னது போல பொருளாதாரத் துறையிலே தமிழிலே படித்தவர்கள் இருக்கிறார்கள். ஆனால் சொல்லிக் கொடுக்கின்றபோது அவர்கள் பட்டம் தமிழிலே படித்து, மேற்கொண்டு மேற்பட்டப்படிப்பிற்குப் போகின்றபோது அங்கே ஆங்கிலத்தில் சொல்லிக் கொடுத்தால், அவர்கள் புரிந்து கொண்டு பதில் அளிப்பதற்கு, பரீட்சை எழுதுவதற்கு சிரமம் இருப்பதை உணர்வார்கள் என்று கருதுகிறேன். அவர்களுடைய வேலைவாய்ப்பைக் கருதிக்கூட, அடுத்த ஆண்டு இந்த நிலை இல்லாமல் இருப்பதற்கு, இந்த ஆண்டே முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, சுருக்கமாக சொன்னால் இந்த வினா எழுப்புகிற மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தும், இந்த அரசாங்கத்தினுடைய கருத்தும் ஏறத்தாழ ஒன்றுதான். ஆனால் செயல்படுவதிலேதான் இந்த ஆண்டு என்று சொல்கிறபோது 90 வது ஆண்டு, ஆகை

யால் அடுத்த ஆண்டான 91-வது ஆண்டிலேதான் நடைமுறைப்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் உருவாக முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அப்துல்சமத் அவர்கள் கவனிக்கவேண்டும். இடத்திலே உட்காரவேண்டும். பேரவைத் தலைவருக்கும், பேசிக் கொண்டிருக்கிற உறுப்பினருக்கும் இடையில், ஒரு முறை எழுந்து போனீர்கள். மீண்டும் ஒரு முறை திரும்பி வருகிறீர்கள். விதிமுறைகளைக் கவனிக்க வேண்டும்.

(ஆ) கோவையில் பேருந்து நிலையங்களுக்கிடையே சுரங்கப்பாதை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' கோவைமாநகரம் காந்திபுரத்திலுள்ள மத்திய பேருந்து நிலையத்திற்கும் நகரப்பேருந்து நிலையத்திற்கும் இடையில் ஒரு சுரங்க பாதை அமைக்கவேண்டிய அவசியம் குறித்த '' அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கோயம்புத்தூர் நகரத்தில் காந்திபுரம் சந்திப்பில், கிராஸ்கட் சாலை, டாக்டர் நஞ்சப்பா சாலை, பாரதியார் சாலை, சக்தி சாலை ஆகியவைகள் சந்திக்கின்றன. பாரதியார் சாலைக்கு வடபுறம் திருவள்ளுவர் பேருந்து நிலையம் உள்ளது. காந்திபுரம் நகர பேருந்து நிலையம் பாரதியார் சாலைக்குத் தென்புறமும், டாக்டர் நஞ்சப்பா சாலைக்கு கீழ் புறமும் அமைந்துள்ளது. காந்திபுரத்தில் உள்ள கோவை வெளியூர் செல்லும் பேருந்து நிலையம் டாக்டர் நஞ்சப்பா சாலைக்கு மேல் புறம் உள்ளது. இந்த இடத்தில் அதிகமாக கடைகளும் இருப்பதால் மக்கள் கூட்டம் எப்பொழுதும் இருந்து கொண்டே இருக்கிறது.

மக்கள் நடமாட்டம் அதிகமாக இருப்பதாலும் மூன்று பேருந்து நிலையங்கள் அருகருகே இருப்பதாலும் மக்கள் அடிக்கடி குறுக்கே கடந்து செல்ல ஏதுவாகிறது. எனவே விபத்துக்களை தவிர்க்கவும், வாகனங்கள் வேகமாக செல்வதற்கு இரண்டு சுரங்க வழி நடைபாதைகள், ஒன்று டாக்டர் நஞ்சப்பா சாலையில், போக்குவரத்து காவல் நிலையத்திற்கு எதிரிலும், மற்றொன்று பாரதியார் சாலையில் திருவள்ளுவர் பேருந்து நிலையத்திற்கு அருகிலும் அமைக்க வேண்டும்.